ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2318/51 - 2023 පෙබරවාරි මස 10 වැනි සිකුරාදා - 2023.02.10

*2318/51 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

இணைப்பு - 01

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(இ) ஆம் உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாணத்தின் 1990 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பது தொடர்பான நியதிச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் உத்தரவு**

மேல் மாகாணத்தின் ஆளுநர் றொஷான் குணதிலக ஆகிய எனக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(இ) ஆம் உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாணத்தின் 1990 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பது தொடர்பான நியதிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கிணங்க பின்வரும் ஒழுங்கு விதிகள் இங்கு அமுல்படுத்தப்படுவதாக இங்கு அறிவிக்கின்றேன்.

மேலும் மேற்கூறிய ஒழுங்குவிதிகள் 2023, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமாறு அதிகாரம் பெற வேண்டும் என்பதையும் இதன் மூலம் அறிவிக்கின்றேன்.

**றொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அன்ட் கார் வீஎஸ்வீ யூஎஸ்பி பீஎச்டி) சிறப்பு,
(எப்ஜஎம்) ஸ்ரீலங்கா (என்டிசீ பீஎஸ்சீ),
விமானப்படையின் மார்ஷல்,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

பத்தரமுல்ல,
மேல் மாகாண சபைக் கட்டிடத்தில் அமைந்துள்ள
மேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில்.
*2023, பெப்புருவரி 06.*

## ஒழுங்குவிதிகள்

1. இந்த ஒழுங்குவிதிகள் மேல் மாகாணத்தில் வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடமைப்பு உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை ஏற்படுத்துவதற்கும் இந்த விடயங்களுக்கு உரியதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1552 ஆம் இலக்க 2008, மே மாதம் 30 ஆந் திகதிய வர்த்தமானியின் கீழ் மற்றும் 1916/ 9 ஆம் இலக்க, 2015, மே மாதம் 27 ஆந் திகதி அதிவிசேட வர்த்தமானியின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகளை இல்லாதொழிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

2. இந்த ஒழுங்குவிதிகள் மேல் மாகாணத்தில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீட்டு உதவிகளை வழங்குவது தொடர்பான ஒழுங்குவிதிகள் என அழைக்கப்படும்.

3. மேல் மாகாண வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் வீடமைப்பு உதவி பின்வரும் வகைகளின் கீழ் உரிய பெறுமதியின் கீழ் இருக்க வேண்டும்.

| தொகுதி | பெறுமதி |
|---|---|
| 01. 5 'அ' (1). ஒரு வீட்டினை புதிதாகக் கட்டுதல் | |
| இந்த நோக்கத்திற்காக ஒரு பயனாளிக்கு வழங்கப்படும் அதிகபட்ச உதவித் தொகை (துவணைகளின் எண்ணிக்கை 2 ஆகும்.) | ரூ. 200,000.00 |
| (i) வேலையை ஆரம்பிக்கத் தயாராக இருக்கும்போது - ரூ. 100,000.00 | |
| (ii) பகுதியளவு கட்டி முடிக்கப்பட்ட வீட்டின் மீதமுள்ள பகுதியை நிறைவு செய்ய - ரூ. 100,000.00 | ரூ. 100,000.00 |
| 02. 5 'அ' (2). தற்போதுள்ள வீட்டை மேம்படுத்துவதற்கும், பகுதியளவு கட்டி முடிக்கப்பட்ட வீட்டை நிறைவு செய்யவும் (துவணைகளின் எண்ணிக்கை 2 ஆகும்) | |
| (i) வேலையை ஆரம்பிக்கக் தயாராக இருக்கும்போது - ரூ. 50,000.00 | |
| (ii) திட்டமிடப்பட்ட வேலைகளில் பாதி முடிந்தவுடன் - ரூ. 50,000.00 | |
| 03. 5 'அ' (5). "கூரையைத் தயாரிப்பதற்கு நிதி உதவி வழங்குதல்" என்ற ஒழுங்குவிதி இங்கு இல்லாதொழிக்கப்படுகின்றது. | |

4. ஒழுங்குவிதிகள் நடைமுறைக்கு வரும் தினத்திலிருந்து இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1552 ஆம் இலக்க, 2008, மே மாதம் 30 ஆந் திகதி வர்த்தமானியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1916/9 ஆம் இலக்க, 2015, மே மாதம் 27 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மேல் மாகாணத்தில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடமைப்பு உதவி வழங்குவது தொடர்பான ஒழுங்குவிதிகள் இங்கு இல்லாதொழிக்கப்படுகின்றன.

5. சொற்கள் தொடர்பாக வேறு பொருள் கொள்ளல் தேவைப்பட்டாலொழிய இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் "குறைந்த வருமானம் பெறுபவர்" என்பது மாதாந்தம் ரூபா 8,000 இற்கு மேற்படாத வருமானம் உள்ளவர் என்ற கருத்தாகும்.

6. இந்த ஒழுங்குவிதிகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில சொற்களுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டால், சிங்கள சொல்லே அதிகாரம் பெற வேண்டும்.

EOG 02-0116

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.